# விரும்பத்தகாத சம்பவங்கள் நிகழாமல் இருப்பதற்காக பழைமையான மரங்கள் பராமரிக்கப்படும் - ஃபாமி

கோலாலம்பூர், மே 31-

விரும்ப தகாத சம்பவங்கள் நிகழாமல் இருப்பதை உறுதி செய்வதற்காக கூட்டரசுப் பிரதேசத்தில் மரங்களை பராமரிக்கும் பணிகளுக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்படும்.

மரங்களை குறிப்பாக பழைமையான மரங்களை பராமரிப்பதற்காக கூட்டரசுப் பிரதேசத்தில் ஒவ்வொரு நாடாளுமன்ற தொகுதியிலும் நான்கு குத்தகையாளர்கள் நியமிக்கப்படுவார்கள் என்று தொடர்பு துறை அமைச்சர் ஃபாமி பட்சில் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் நான் கோலாலம்பூர் மேயர் கமாருல்சாமானை சந்தித்து பேசினேன். அப்போதுதான் அவர் இதனை என்னிடம் தெரிவித்தார் என்று லெம்பா



பந்தாய் நாடாளுமன்ற தொகுதி கெஅடிலான் உறுப்பினருமான ஃபாமி கூறினார். கடந்த மே 10ஆம் தேதி கேஎல்சிசி அருகே ஜாலான் சுல்தான் இஸ்மாயில் எனுமிடத்தில் பலத்த மழை பெய்த போது ஏராளமான மரங்கள் முறித்து விழுந்தன. இதில் பல வாகனங்கள் மீது மரங்கள் விழுந்ததால் ஒரு வாகனம் முற்றாக நொறுங்கியதில் ஒரு டிரைவர் உயிர் இழந்தார். மேலும் இருவர் காயமடைந்தனர். அந்த பகுதியில் உள்ள மரங்கள் 30 ஆண்டுகளுக்கு முன்னர் நடப்பட்டவை என்பது தெரிய வந்தது. அவை எந்த நேரத்திலும் முறிந்து விழும் நிலையில் இருக்கின்றன.

அதை அடுத்து கடந்த மே 13ஆம் தேதி மாநகரில் உள்ள ஜாலான் பினாங், மே 25ஆம்



தேதி ஜாலான் புக்கிட் பந்தாய், ஜாலான் பந்தாய் பெர்மாய், ஜாலான் ஆரா, ஜாலான் கிள்ளான் லாமா, ஜாலான் லியோங் யூ மற்றும் மே 27ஆம் தேதி ஜாலான் பூச்சோங் ஆகிய பகுதிகளிலும் பலத்த மழை பெய்த போது ஏராளமான மரங்கள் முறிந்து விழுந்தன. இதனால் வாகனங்கள் சேதமடைந்தன. பருவ நிலை மாற்றம் காரணமாக பலத்த மழை எப்போது பெய்யும் என்பதை கணிக்க இயலவில்லை. எனவேதான் பழைமையான மரங்களை கண்காணிக்கவும் பராமரிக்கவும் குத்தகையாளர்களை நியமிக்க கோலாலம்பூர் மாநகர் மன்றம் முடிவு செய்திருக்கிறது என்றும் ஃபாமி பட்சில் தெரிவித்தார்.